மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திசையன்விளை, பணகுடி ஆகிய கல்லூரிகளை இந்த ஆண்டே அரசே எடுத்து செயல்படுத்த வேண்டும்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த ஆண்டே, எடுத்து நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, நிதிநிலைக்கேற்ப அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

242—

கதவணை

***309—திரு. ம. சிந்தனை செல்வன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருகே ஆதிவராகநல்லூரில் வெள்ளாற்றின் குறுக்கே கதவணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், ஆதிவராகநல்லூர் கிராமம் அருகே வெள்ளாற்றின் குறுக்கே கடைமடை ஒழுங்கியம் (*Tailend Regulator*) அமைக்க, நில எடுப்பு உட்பட ரூ.96.58 கோடிக்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவராகநல்லூர் அருகே இந்த அணை கட்டப்பட வேண்டுமென்று கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக கருத்துருக்கள்*

2022 மே 9]

முன்வைக்கப்பட்டுள்ளன. அது அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையாகவும் இருந்து வருகிறது. அதை நிறைவேற்றுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர், அவை முன்னவர் அவர்கள் அறிவித்திருப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) கடலூர் மாவட்டத்து மக்களின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றி கூறி வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வி நேரத்தில் சுருக்கமாகக் கேள்வி கேட்டால், மேலும் இரண்டு உறுப்பினர்கள் கேள்வி கேட்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மிக முக்கியமாக, கடல்நீர் உட்புகுந்து குடிநீர் முற்றிலுமாக உவர்ப்பாக மாறுகின்ற நிலை என்பது கடலோரப் பகுதிகளில் ஒரு பேரிடராக மாறி வருகிறது. அதனால்தான் இத்தகைய கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்தக் கோரிக்கையை ஏற்று, பரிசீலித்து, நடைமுறைப்படுத்த முன்வந்திருக்கின்ற மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய மனம் நிறைந்த நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *கொள்ளிடம் வடக்குராஜன் கால்வாய்மீது அமைந்திருக்கின்ற தார்ச் சாலையைக் கொண்டுதான் கொள்ளிடத்தை நாம் பாதுகாக்க வேண்டும். பொதுப் பணித் துறையும் அந்தச் சாலையைப் பயன்படுத்துகிறது; பொதுப் போக்குவரத்துக்கான சாலையாகவும் அந்தச் சாலை இருக்கிறது. கடந்த காலங்களில் மணல் குவாரி அந்தப் பகுதியிலே அமைக்கப்பட்டதால், அந்தத் தார்ச் சாலை முழுவதுமாகச் சேதமடைந்திருக்கிறது. அதையும் சரி செய்து தர வேண்டும். அதேபோல, மாதிரிவேளூர் மற்றும் கருப்பூருக்கு இடையிலும் தடுப்பணைக் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையும் அந்த மக்களிடத்திலே இருந்து வருகிறது. இவற்றைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.*

[2022 மே 9

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளாறு சேலம், பெரம்பலூர், கடலூர் மாவட்டங்கள் வழியாக ஓடி, பரங்கிப்பேட்டையில் கடலில் கலக்கிறது. அங்கே* high tide *வரும்போது 18 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல்நீர் உள்ளே புகுந்து விடுவதால், 2007 ஆம் ஆண்டு 4 கோடி ரூபாய் செலவில் தரைகீழ் தடுப்பணைக் கட்டுவதற்கு அரசு முடிவு செய்தது. ஆனால், அருகிலே முகத்துவாரம் இருக்கிறது; சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு இருக்கிற காரணத்தால், 5–11–2009–ல் ஓர் ஆய்வு செய்து, தடுப்பணை மட்டும் அமைக்க முடிவு செய்யப்பட்டது.* Tailend regulator-*ஐ மாற்றுகிறார்கள். இதனுடைய மதிப்பு 47 கோடி ரூபாய். இந்த நேரத்திலே அந்த ஆறு, திசை மாறி* private land-*ல் ஓடிவிடுகிறது. ஆக,* private land–*ஐ நாம்* acquire *செய்தால்தான் முடியும். அதற்கு 33 கோடி ரூபாய் செலவாகும். 33 கோடி ரூபாய்* land–*ஐ* acquire *செய்வதற்கு வேண்டும். அதற்குப் பிறகு அதைக் கட்டுவதற்கு 91 கோடி ரூபாய் வேண்டும். இந்தத் திட்டத்தை நாங்கள் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். அவர்கள் அதை ஒத்துக்கொள்ள வேண்டும்;* Finance Department *அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகுதான் உங்களுக்குச் செய்துதர முடியும். ஆகையினால், திட்டங்கள் தயாராக இருக்கின்றன. நிதியாதாரத்தைப் பொறுத்து செய்து முடிக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன என்பது ஆறுதலான, நம்பிக்கையான அம்சமாக இருக்கிறது. அதேசமயத்தில், காட்டுமன்னார்கோவில் தொகுதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருணைப் பரப்பு விரியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதேபோல, காவனூர்–கள்ளிப்பாடி அருகேயும் ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையும் அந்தப் பகுதியில் நீண்ட நாட்களாக இருக்கிறது. திருமுட்டம் ஒன்றியம், வெள்ளாற்றால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.*

TRUTH ALONE TRIUMPHS

2022 மே 9]

வெள்ளாற்றுக்கு அப்பால் 15 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவர்கள் வெள்ளாற்றினைக் கடந்து வருவதற்கான வாய்ப்பில்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, காவனூர்–கள்ளிப்பாடி பாலம், வடக்குராஜன் கால்வாய்மீது அமைந்திருக்கிற தார்ச் சாலை, இவற்றைச் செய்து முடிக்க, உடனடியாக ஒரு செயல் திட்டத்தைத் தீட்டி செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது துணைக் கேள்வியுடன் சேர்ந்த ஒரு புதுக் கேள்வி. இதுகுறித்து நான் அதிகாரிகளோடு கலந்துபேசி, கூடுமானவரையில், ஆவன செய்ய முற்படுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதியில் உத்தமபாளையம் ஒன்றியத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 33.52 கோடி ரூபாய் செலவில் பதினெட்டாம் கால்வாய் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் மூலமாக 7,000–க்கும் மேற்பட்ட கிணறுகளில் தண்ணீர் செறிவூட்டுவதன் காரணமாக, 10,000 ஏக்கர் நிலப்பரப்பு நேரடியாகவும், மறைமுகமாகவும் பாசன வசதி பெறுகின்றன. இத்திட்டத்தை நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்தான் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்திற்கு* PTR *பழனிவேல் ராஜன் கால்வாய் என்ற பெயரும் இருக்கின்றது. பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கின்றது. மண் சரிந்து குவியல் குவியலாக இருக்கின்றது. தண்ணீர் விரைந்து கண்மாய்க்குச் சென்று சேர முடியவில்லை. எனவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தயவுகூர்ந்து சீரமைத்துத் தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், அந்தக் கால்வாயைச் சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே, அந்தத் திட்டத்தை முன்னால் இருந்த அரசு எடுத்திருந்தது. அதைச் செயல்படுத்துவதற்கு முற்பட்ட நேரத்தில், அதில் சில சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தினால், அதற்கு டெண்டர் விடும் பணிகூட நிறுத்தப்பட்டது. மீண்டும் அதிலிருக்கும் சிக்கல்களைக் களைந்து, அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தத் திட்டம் கோபிசெட்டிப்பாளையம் வரை இருக்கிற விவசாயிகளுக்கும் பயனளிக்கக்கூடிய ஒன்றுதான் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லி தொகுதி, திருவள்ளூர் வட்டம், வெள்ளியூர், கிருகம்பூண்டி வழியாக கொசஸ்தலை ஆறு வந்து கொண்டிருக்கிறது. அந்த ஆற்றின் குறுக்கே 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தடுப்பணை இப்போது உடைந்து, சேதமடைந்திருக்கிறது. அந்தத் தடுப்பணையில் தண்ணீர் தேக்கப்பட்டால், கிட்டத்தட்ட வெள்ளியூர், விளாப்பாக்கம், மேல்செம்பேடு, கீழ்செம்பேடு, எறையூர் போன்ற பகுதிகளில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், என்ன வேண்டுமென்று கேளுங்கள்.*

முற்பகல் 10–20

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *விவசாயம் பாதுகாக்கப்படும். அதேநேரத்திலே வறண்டு போகிற பூண்டி ஏரியிலோ அல்லது புழல் ஏரியிலோ தண்ணீர் இல்லாத காலகட்டங்களில் சென்னைக்கு குடிநீரை* borewell *மூலமாகக் கொண்டுவரக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. அந்தப் பகுதியிலே புதியதாக இரண்டு தடுப்பணைகள் கட்டப்பட வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கடிதமாகவும் கொடுத்திருக்கிறார்கள். இதுவரை கட்டித் தரப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலாவது, வெள்ளியூர், கிருகம்பூண்டி ஆகிய இரண்டு தடுப்பணைகளை கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2022 மே 9]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர் தந்த கடிதம் என் பரிசீலனையில் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வந்துவிடுங்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் வெள்ளாற்றில் தடுப்பணைக் கட்டுவதற்குத் திட்டம் தயார் என்று அறிவித்தார்கள். இது முழுக்க, முழுக்க சிதம்பரம் மற்றும் புவனகிரி தொகுதி மக்களின் பிரச்சினை. கோடைக் காலங்களில், வீராணத்தில் இருந்து உபரிநீர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காரண, காரியம் தேவையில்லை. எந்த இடத்தில் என்ன செய்ய வேண்டுமென்று மட்டும் கேளுங்கள்.*

திரு. அருண்மொழிதேவன்: *வெள்ளாற்றில் உபரிநீர் திறந்துவிடாத காலங்களிலும் கடல்நீர் உட்புகுந்து கிட்டத்தட்ட 20 கிராமங்களின் நிலத்தடி நீர் உப்பு நீராக மாறி, விவசாயத்திற்கும், குடிநீருக்கும் பயனற்றதாக மாறியுள்ளது. அந்தப் பகுதி மக்களின் விவசாயம் முழுக்க கேள்விக்குறியாக உள்ள நிலையில், இந்த ஆண்டே அந்தத் தடுப்பணையைக் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நான்தான் முன்பே சொன்னேன். திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. முதலில் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டும். அதற்கு 33 கோடி ரூபாய் தேவை என்று என்னுடைய இலாக்கா அரசுக்கு செய்தி அனுப்பியிருக்கிறது. அதற்குமேல், அரசாங்கம், நிதி அமைச்சர், நிதித் துறையோடு கலந்துபேசி முடிவெடுக்கப்படும். ஆனால், தடுப்பணைக் கட்டப்பட வேண்டிய ஒன்று. காரணம் 18 கிலோ மீட்டர் தூரம் கடல்நீர் உள்ளே புகுந்து இருக்கிறது. ஆகையால், தடுப்பணைக்*

[2022 மே 9

கட்டுவதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. விரைவில், நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் பேசி, தடுப்பணைக் கட்டுவதற்குரிய நடவடிக்கையை எடுக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி மலை அணை அருகிலே 15 ஏக்கர் நிலம் உள்ளது. திருமூர்த்தி மலை அணைக்கு அருகிலே இருக்கின்ற நிலத்திலே ஏற்கெனவே நவீன பூங்கா அமைப்பதற்காகக் கருத்துரு பெறப்பட்டு, அதற்கு ரூ.3 கோடி செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற காரணத்தாலே, அந்த நவீன பூங்காவை அமைக்க அணை புனரமைப்பு நிதியிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கிக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும், நவீன பூங்கா அமைக்கப்படும்போது அரசாங்கத்திற்கும் வருமானம் வரும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்தில் நேரடியாகவும் இந்தக் கருத்தைச் சொன்னார்கள். சொன்னவுடனே அங்கே இருக்கின்ற Regional Chief Engineer அவர்களிடம் பேசி அதுகுறித்து உடனடியாக ஒரு ரிப்போர்ட் அனுப்பச் சொல்லியிருக்கின்றேன். ரிப்போர்ட் வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அமைச்சராக இருந்தபோதுதான் குப்பநத்தம் அணை கட்டப்பட்டது. இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத் தொடங்கி வைத்தார்கள். தென்பெண்ணை

2022 மே 9]

ஆறும், செய்யாறும் செங்கம் தொகுதியில்தான் ஓடுகின்றன. ஆனாலும், குப்பநத்தம் அணைக்கு, குப்பநத்தம் ஏரியில் தண்ணீர் இல்லை. சாத்தனூர் அணைக்கு, சாத்தனூர் ஏரியில் தண்ணீர் இல்லை. எனவே, இரண்டு பகுதிகளுக்கும் மேற்புற கால்வாய் அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்கு பாசன வசதி ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து குறித்து அதிகாரிகளோடு கலந்துபேசி, முடியும் என்றால், நிச்சயமாகச் செய்து தருவேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியில் விழுப்புரம் எல்லையாக இருக்கின்ற எனதிரிமங்கலத்தில் கட்டப்பட்ட தடுப்பணை, கடந்த கால ஆட்சியில் கடும் மழை வெள்ளத்தால் முற்றும் முதலுமாக அடித்துச் செல்லப்பட்டது. பிறகு, புனரமைப்புக்காகக் கடந்த கால ஆட்சியில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், அந்தப் பணி இதுவரையில் தொடங்கப்படவில்லை. அந்தப் பணியைத் தங்கள் ஆட்சிக் காலத்தில் தொடங்கி, இருபக்கமும் தடுப்பணைகளைப் பலப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். (குறுக்கீடு) எனதிரிமங்கலம் check dam கடந்த கால ஆட்சியில் முற்றும் முதலுமாக அடித்துச்செல்லப்பட்டது. எல்லாம் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது; total loss. அது புனரமைக்கப்படாமல் அப்படியே இருக்கிறது. தங்கள் ஆட்சிக் காலத்தில் அது புனரமைக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அந்த அணையை சிமெண்ட் போட்டு கட்டினார்களா அல்லது களிமண் வைத்து கட்டினார்களா*

அல்லது இரண்டும்கூட வைக்காமல் கட்டினார்களா என்றுகூட எனக்கு சந்தேகம். அந்த அளவுக்கு ஒரு தரமற்ற dam-ஐ கட்டியிருக்கிறார்கள். அதனால் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. இதுகுறித்து, கட்டப்பட்டவர்மீது வழக்கு தொடுக்கப்பட்டு, அது தனியாக நடந்துகொண்டிருக்கிறது. அது மீண்டும் கட்டப்பட வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. அது வழக்கில் இருக்கிறது. அதற்குத் தனியாக ஒரு திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கின்றோம்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 244, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

244—

மேம்பாலம்

***58339— திரு. A.P. நந்தகுமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், விரிஞ்சிபுரம், பழுதடைந்த பாலாறு தரைப் பாலத்திற்கு மாற்றாக புதிய மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடந்த 2021 ஆம் ஆண்டு, அக்டோபர், நவம்பர் மாதங்களில் இதுவரை காணாத அளவிற்கு வேலூர் மாவட்டத்தில் மழை பெய்தது. அதனால் கே.வி. குப்பம், செதுவாளை, விரிஞ்சிபுரம் வழியாக பாலாற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலம் முழுமையாகச் சேதமடைந்து, போக்குவரத்து செல்ல முடியாத அளவிற்கு அது சீர்கெட்டது. இந்த நிலையில் இந்தத் தரைப் பாலத்தை Central Road and Infrastructure Fund *(*CRIF*) 2022–2023 திட்டத்தின்கீழ் உயர்மட்டப் பாலமாகக் கட்ட தேசிய நெடுஞ்சாலை அலகு மூலமாகக் கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் இப்போது உள்ளது.*